# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ   அதி விசேஷமானது

අංක 2266/3 – 2022 පෙබරවාරි මස 07 වැනි සඳුදා – 2022.02.07
**2266/3 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு  பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2022 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல.: 4-3/7/2020/HW/292.
பிர. செய. குறி. இல.: 4/1/අත්පත්/විදුලියහැන්/111.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், கீழ் விபரிக்கப் பட்டுள்ள அட்டவணையில் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வட்டணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எஸ். எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர"
1200/6, காணிச் செயலகம்,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, சனவரி 15.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், மல்லவப்பிட்டி.

2. **காணியின் விபரம்**:- வடமேல் மாகாணத்தில், குருநகால் மாவட்டத்தில், மல்லவப்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவில், இல. 717 - பள்ளே கெட்டுவான கிராம அலுவலர் பிரிவில், பகல கெட்டுவான கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவை அதிபதியினால் தயாரிக்கப்பட்ட 2021.07.06 ஆந் திகதிய முதற் சுவட்டு இல. KU/MLL/2021/82 இல் விபரிக்கப்பட்ட காணித் துண்டின் எல்லைகள் :

01. **துண்டு இல. 2 - வெலிகும்புர - விஸ்தீரணம் : 0.0196 ஹெக்டயார்**

வடக்கு : அதே காணியின் மிகுதிப் பகுதி ; கிழக்கு : அதே காணியின் மிகுதிப் பகுதி ;தெற்கு : அதே காணியின் மிகுதிப் பகுதி ; மேற்கு : மத்திய அதிவேக நெடுஞ்சாலைக்கு ஒதுக்கப்பட்ட இடம்.

EOG 02 - 0381


1A – G 35995 – 20 (2022/02)   இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.